**செய்தி வெளியீடு எண்: 557** **நாள்: 3/11/2014**

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையானது கடந்த 01.10.2014 ல் தொடங்கி தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக சென்னை உள்ளிட்ட கடலோர மற்றும் தென் மாவட்டங்களில் தொடர்ந்து பெய்த வண்ணம் உள்ளது. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பணிகளை மேலும் தூரிதப்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், தலைமைச்செயலர், நிதித்துறைச் செயலர், வருவாய்த்துறைச் செயலர், மாநில நிவாரண ஆணையர் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டமானது, கடந்த 24 மற்றும் 28.10.2014 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டு பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில், அதிக அளவில் பாதிக்கப்பட்ட, 20 மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை அரசுச் செயலாளர் நிலையில் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்க இடம், உண்ண உணவு, உடை மற்றும் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிவாரணப்பணிகளை துரிதப்படுத்திடும் வகையில், கடந்த 16.10.2014 மற்றும் 26.10.2014 ஆகிய நாட்களில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டமும் நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளின் நிலைகுறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் தலைமையில் இன்று (3.11.2014) பிற்பகல் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் மாநில அவசர கட்டுப்பட்டு அறையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலர் / மாநில நிவாரண ஆணையர் முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., இணை ஆணையர் (பேரிடர் மேலாண்மை) திருமதி. ஆர். லில்லி இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், வடகிழக்கு பருவமழை காரணமாக, மாவட்டங்களில் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகளின் தன்மை, வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவித் தொகை ஆகியவை குறித்தும் ஆய்வு

செய்தார். குறிப்பாக, கனமழை காரணமாக, மின்சாரம் தாக்கியும், இடி மின்னல் தாக்கியும், சுவர் இடிந்து விழுந்தும், வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டும் உயிரிழந்த நபர்களின் 30 குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள உடனடி நிவாரண உதவித்தொகை, பலியான கால்நடைகளுக்கான நிவாரண உதவித்தொகை, முழுமையாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ள வீடுகளுக்கான நிவாரண உதவித்தொகை ஆகியன விரைந்து வழங்கப்பட்டு வருவதாக மாநில நிவாரண ஆணையர்அவர்கள் தெரிவித்தார்கள்.

கனமழை காரணமாக ஈரோடு, திருப்பூர், திருவாரூர், திண்டுக்கல், கரூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் மழை நீர் / வெள்ளநீர் சூழ்ந்ததன் காரணமாக, பாதுகாப்பு கருதி, அப்பகுதியில் வசித்த 4,385 நபர்கள் 17 மையங்களில் தங்கவைக்கப்பட்டு, தகுதியான நபர்களுக்கு உடனடி நிவாரண உதவியாக, குடும்பம் ஒன்றிற்கு 10 கிலோ அரிசி, வேட்டி, சேலை ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ரொக்கத் தொகையாக ரூ. 1,000/– வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மூழ்கியுள்ள பயிர்கள் விவரம் குறித்து, வெள்ள நீர் வடிந்த பின்னர் ஆய்வு செய்து உரிய அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் மாண்புமிக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து அவ்வப்போது பெறப்படும் மழைநீர் அளவு மற்றும் 1070 இலவச தொலைபேசி வாயிலாக பெறப்பட்ட சேதங்கள் குறித்த விவரங்களையும் ஆய்வு செய்தார்கள். இது போன்ற பேரிடர் காலங்களில் நாம்அனைவரும் அர்ப்பணிப்போடு பணியாற்றிட வேண்டுமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர்
வருவாய் நிருவாகம், எழிலகம், சென்னை 5

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9